முன்னுரிமை கொடுத்து, மீண்டும் அந்த இடங்களுக்கு நீர் நிலையை உருவாக்கிக் கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் செயல் பட்டு வருகிறது. அந்த அடிப்படையிலேதான் அம்பத்தூரிலே கூட புதிய நீர் நிலைகளைக் கண்டுபிடித்து, அதற்கான ஏற்பாடு களைச் செய்து வருகிறது. ஆகவே, பழைய காலத்திலே ஏற்பட்ட இதுபோன்ற நீர் நிலைய ஆதாரங்கள்—அப்போது இருக்கிற நீர் நிலையங்களை வைத்து அவர்கள் எடுத்துவிட்டதாகக் குறிப்பிடு கிறார்கள். பல்வேறு காரணங்களால், வறட்சி ஏற்பட்டுவிட்ட சூழ்நிலையில் அந்த நீர் நிலையங்கள் வற்றிப் போய்விட்டன என்ற காரணத்தையும் குடிநீர் வடிகால் வாரியத்தைச் சேர்ந்த வர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் இப்போது எல்லாம் நீண்ட எதிர்காலத்தை நோக்கி, திட்டங்கள் தீட்டப்பட்டு, முழு மையாக நீர் நிலைய ஆதாரம் கிடைத்த பிறகுதான் இந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று ஆணையிடப்பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையிலே முழுமையாகப் பணிகளை இந்த அரசு நிறைவேற்றி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப் பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிவிப்பு

தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்ட முன்வடிவு, 1990 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறி விப்பு. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக் குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்ட முன் வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்).

தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்ட முன் வடிவு, 1990.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதி களுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச்சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

**திரு. குமரி அனந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நுழைவு வரி போடப்படுகிற இந்த அரசினுடைய சட்ட முன் வடிவை அறிமுக நிலையிலேயே நான் எங்களுடைய கட்சியின் சார்பில் எதிர்ப்பைத் தெரிவிக்கிறேன்.**

*1990 ஏப்ரல் 9]*

திரு. எஸ். ஆர். ராதா : தலைவர் அவர்களே, சட்ட முன் வடிவை அறிமுக நிலையிலேயே எங்கள் கட்சியின் சார்பில் எதிர்ப்பைத் தெரிவிக்கிறேன். ஆனால் கருத்தைச் சொல்ல நீங்கள் அனுமதிக்க மாட்டீர்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்ப்பே வலிமையானது. எனவே கருத்துக்கு இடம் இல்லை.

பேரவை முன்னுள்ள கேள்வி :

''1990 ஆம் ஆண்டு தமிழ் நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பிற மாநிலங்களில் குறைந்த வரி விதிக்கப்படுகின்ற காரணத்தால், நாம் பெரிய இழப்புக்கு ஆளாக நேரிடுகிறது. எனவே அப்படிக் குறைந்த வரிக்காக சிலர் இங்கேயிருந்து வாகனங்களை ரிஜிஸ்தர் செய்ய வேறு மாநிலங்களுக்குச் சென்று விடுகிறார்கள். அதைத் தடுப்பதற்கும் மாநிலத்திற்கு வருவாய் வருவதற்கும் தான் இந்த முயற்சியாகும். நுழைவு வரி என்கிற பெயரை மாத்திரம் வைத்துக் கொண்டு, இதை எதிர்க்கத் தேவையில்லை என்று கூறி இந்தச் சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு பேரவை முன் அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

திரு. குமரி அனந்தன் : பாயின்ட் ஆப் கிளாரிபிகேசன். தமிழகத்தினுடைய எல்லைக்குள் என்று இருந்தால், அது பற்றி நாம் சிந்திப்பதற்கு இருக்கிறது. உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் என்று சொல்லுகிறபோது, ஒவ்வொரு யூனியனையும் அல்லது நகரசபைகளையும் குறிக்குமோ என்ற காரணத்தாலே அந்தச் சொல்லாட்சியைப் பற்றி எனக்கு இங்கே சற்று கருத்து அல்லது விளக்கம் வேண்டுவதாக இருக்கிறது. உள்ளாட்சி என்று இருக்கிற காரணத்தாலே.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இது நல்லாட்சி. எனவே சொல்லாட்சியைத் தவறாகப் பயன்படுத்தாது. இதிலே கொடுக்கப்பட்டுள்ள சட்டத்தைப் பற்றிய விளக்கங்கள் தங்களுக்குத் தரப்பட்டு இருக்கிறது. அதிலேயே உள்ளாட்சிப் பகுதி ஒன்றுக்குள் இயக்கூர்திகள் நுழைவு என்றால், அச்சொல்லமைப்பு இலக்கண வகையில் வேறுபட்டால்,

அவ்வேறுபாடுகளும் அச்சொல்லமைப்பின் மூலமாகக் கொண்ட பிற சொல்லமைப்புகளும் சேர்ந்து, இம்மாநிலத்திற்கு வெளியிலே உள்ள இடம் எதிலிருந்தேனும் உள்ளாட்சிப் பகுதி ஒன்றில் பயன்படுத்துவதற்காகவோ விற்பனை செய்வதற்காகவோ அப்பகுதிக்கு கொண்டு வரப்படும் இயக்கூர்திகள் நுழைவு என்று பொருள்படும் என்று விளக்கம் இருக்கிறது.

10.45 மணி

7. மானியக் கோரிக்கைகள் 1990–91—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 13—நீதி நிருவாகம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

*''மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிருவாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 27,68,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.*

திரு. யூ.கே. வெள்ளங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேங்கிக் கிடக்கும் வழக்குகளை விரைவாக முடிக்கவும், மேலும் கூடுதல் நீதிபதிகளை நியமிப்பது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

*''மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிருவாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,68,13,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.*

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்ட நீதிமன்றத்தின் வளாகத்தில் வழக்கறிஞர் சங்கத்துக்கு கட்டிடம் கட்டுவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

*''மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிருவாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,68,13,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.*

(ஆ) கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS